*6th International Symposium 2016, South Eastern University of Sri Lanka, pp. 858-864.*

# தமிழில் மதியீனத்தினைக் கருப்பொருளாகக் கொண்ட கதை இலக்கியங்களின் தோற்றமும் செல்வாக்கும்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
*cumaran2004@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்:** கதை இலக்கியங்கள் மிகப் பழங்காலந் தொட்டே தமிழில் செல்வாக்குப் பெற்று வந்துள்ளன. எனினும் ஐரோப்பியர் வருகைக்கு முன்னதாகத் தமிழில் எழுந்த கதைகள் வாசகர்களின் சிந்தனை, செயலாற்றல், விவேகம் என்பவற்றைத் தூண்டுவனவாகவே அமைந்தன. இக் கதைகளுடன் 'மதியீனத்தினை' (யடிளரசனவைல) மையமாகக் கொண்ட நகைச்சுவையுணர்வினை முன்னிறுத்திய கதை மரபொன்று (யுடிளரசன ளுவழசநைள) ஐரோப்பியர் காலத்தில் புதிதாக மேற்கிளம்புகின்றது. இத்தாலி நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வருகை தந்து, தமிழ்ப் பணியும் சமயப் பணியுமாற்றிய வீரமாமுனிவரின் 'பரமார்த்தகுரு கதை' இம் மரபிற்கு அத்திவாரமிடுவதைக் காணலாம். இக் கதைமரபு தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமான சூழல், செல்வாக்கு மற்றும் பரம்பல் என்பவற்றினைத் தாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. தாக்கக் கோட்பாடு என்பது மொழிகளுக்கிடையிலான கொள்ளல் கொடுத்தல்களையும் இலக்கியப் பண்புகள் மற்றும் கூறுகள் பரம்பலும் வளர்ச்சியும் அடையும் விதத்தினையும் விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்வதாகும். பரமார்த்தகுரு கதைகள், கி.பி 12 ஆம் நூற்றாண்டளவில் ஆங்கில வாய்மொழிமரபிலே தோற்றம் பெற்று, காலப்போக்கில் ஐரோப்பாவின் பலமொழிகளிலும் செல்வாக்குப் பெற்ற 'கோதம் கிராம புத்திசாலிகள்'(றுளைந அநெ ழக புழவாயஅ) என்னும் தொகுதியிலுள்ள கதைகளின் தாக்கத்திற்கு உட்பட்டவையாகும். இக் தொகுதியிலுள்ள கதைகள் பரமார்த்தகுரு கதையில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதனையும் வீரமாமுனிவர் தனது படைப்பில் தனித்துவத்தினை எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதனையும் அதன் மூலமாகத் தமிழுக்குப் புதியதொரு கதைமரபினை எங்ஙனம் தொடக்கி வைத்தார் என்பதனையும் நுணுகி நோக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது. இதன் மூலம் மதியீனத்தினை முன்னிறுத்தும் கதைமரபின் தோற்றம் செல்வாக்கு என்பவற்றையும் வீரமாமுனிவரின் படைப்பாளுமை, பரமார்த்தகுரு கதையின் தனித்துவம் மற்றும் சிறப்பு, மேனாட்டு கதை இலக்கியத் தாக்கம் அதன் விளைவு முதலான விடயங்களையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள்:** மதியீனக்கதைகள், பரமார்த்தகுரு கதை, வீரமாமுனிவர், கோதம் கிராம புத்திசாலிகள், தாக்கக் கோட்பாடு

## 1. அறிமுகம்

உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் பல்லாயிரக் கணக்கான கதைகள் காலந்தோறும் தோற்றம் பெற்றுள்ளன. மக்களின் அறிவு, ஆற்றல், அனுபவம் என்பனவற்றுக்கு ஏற்ப இக்கதைகள் உருவாக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். இக் கதைகளின் தோற்றம் பெரும்பாலும் நாட்டார் மரபிலேயே ஆரம்பத்தில் நிகழ்ந்திருக்கின்றது. தம் மனதில் பதிந்த விடயங்களைத் தமது கற்பனைக்கும் கருத்துக்கும் இயன்ற வகையில் கதைகளாக மக்கள் வெளிக்கொணர்ந்துள்ளனர். அதிக எண்ணிக்கையான நூற் பிரதிகளோ அல்லது பிற பொழுதுபோக்குச் சாதனங்களோ இல்லாத அக்காலத்தில் மக்களின் இலக்கியச் சுவையனுபவத்துக்குத் தீனி போட்டவைகள் கதைகளும் நாட்டார் பாடல்களுமேயாகும். இன்றும் அவற்றின் செல்வாக்கு கிராமப்புறங்களில் வலுவாக இருப்பதனைக் காணமுடிகின்றது. கதைகள் பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வாழ்வுபெற்று வந்துள்ளன. அவற்றின் கையளிப்பு பெரும்பாலும் வாய்மொழி வடிவிலேயே நிகழ்ந்து வந்துள்ளது. இவற்றுள் எழுத்து வடிவு பெற்று நிலைத்த வாழ்வினைப் பெற்றவை ஒரு சிலவே. ஏராளமான கதைகள் காலவெள்ளத்துள் கரையுண்டு போயின.

தமிழிலும் ஏராளமான கதைகள் நாட்டார் மற்றும் செந்நெறி மரபுகளில் வழங்கி வழங்கி வருகின்றன. இதிகாசக்கதைகள், காவியக் கதைகள், வீரர்கள் மற்றும் மன்னர்களின் வரலாற்றோடு தொடர்புபட்ட கதைகள், புலவர்கள் அவர்களின் வித்துவத் திறனுடன் சம்பந்தப்பட்ட கதைகள், புத்திசாதுரியம் அல்லது சாமர்த்தியத்தினை வெளிப்படுத்தும் கதைகள் என அவற்றினைப் பகுத்து நோக்க முடியும். ஆனால் ஐரோப்பியர் காலத்தில் இக் கதைகளுடன் கூடவே முட்டாள் கதைகளும் (Absurd stories) தமிழில் பிரபலமாகின்றன. இவை தமிழில் புதிய கதைமரபு உருவாக வழிவகுப்பதோடு தனியான கவனிப்பையும் செல்வாக்கினையும் வாசகர் மத்தியில் பெற்றுக் கொள்வதைக் காண முடிகின்றது. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கு இலக்காகிய கதைகளாக இவையுள்ளன.

## 2. ஆய்வின் நோக்கம்

தமிழில் மதியீனத்தினை முன்னிறுத்தும் கதைகளின் அறிமுகம் மற்றும் பரம்பலைத் தாக்கக் கோட்பாட்டின் பின்னணியில் விளங்கிக் கொள்ள முனைவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

அந்தவகையில் மதியீனக் கதைகள் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமான பின்னணி, அதன் மூலக்கதை பற்றிய தேடல், கதை பரம்பலடைந்த வகை, தமிழ் இலக்கியச் சூழலில் அதன் தாக்கம் என்பன இங்கு விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதன் மூலமாக பரமார்த்தகுரு கதையின் முக்கியத்துவம், தனித்துவம், பரம்பல், பாதிப்பு, கதாசிரியரின் திறன்கள் முதலானவற்றினை வெளிக்கொணர முடியும்.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு ஒப்பியல் இலக்கியக் கோட்பாடுகளுள் ஒன்றான தாக்கக் கோட்பாட்டின் பின்னணியில் மேற்கொள்ளப்படுகின்றது. தாக்கக் கோட்பாடு இலக்கியங்களின் பரம்பல், பாதிப்பு, வளர்ச்சி என்பவற்றினை விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொள்ள உதவுகின்றது. இக்கோட்பாட்டின் பின்னணியில் ஆய்வு செய்து திரட்டப்படும் தகவல்கள் விவரண முறையியலின் அடிப்படையில் இக்கட்டுரையில் பதிவு செய்யப்படுகின்றன.

## 4. தமிழில் மதியீனத்தினைக் கருப்பொருளாகக் கொண்ட கதை மரபு

மதியீனத்தினைக் கருப்பொருளாகக் கொண்ட கதை மரபினைத் தமிழில் தொடக்கி வைத்தவர் வீரமாமுனிவர். 'பரமார்த்தகுரு கதை' என்னும் அவரது கதைத் தொகுதி இத்தகைய கதை மரபு தமிழில் காலூன்றுவதற்கு அத்திவாரமிடுகின்றது. பரமார்த்தகுரு கதை தோற்றம் பெறுவதற்கு முன்னர் விவேகம், அறிவு புகட்டல், நம்பிக்கையூட்டல் சிந்தனைத் தெளிவு, செயலூக்கம், ஆர்வம் என்பவற்றினைத் தூண்டும் கதைகளே தமிழில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன. நகைச்சுவையுணர்வினைத் தமிழ் இலக்கியங்களில், குறிப்பாகத் தனிப்பாடல்கள், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்றவற்றில் அவதானிக்க முடிந்தாலும், 'மதியீனத்தினை'த் தனித்துக் குவிமையப்படுத்தி நகைச்சுவையுணர்வைத் தூண்டும் கதைமரபு பரமார்த்தகுரு கதையுடனேயே தோன்றுகின்றது எனலாம்.

### அ. வீரமாமுனிவர்

வீரமாமுனிவர் (1680 – 1747) இத்தாலி நாட்டில் வெனிஸ் நகரத்தில் பிறந்தவர். 'கான்சன்டைன் யோசெப் பெஸ்கி' (Constantine Joseph Beschi) என்பது அவரது இயற்பெயராகும். யேசுசபைக் குருவான இவர் 1710 இல் தமிழகம் வந்தார். மதத்தினை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு மக்களோடு மக்களாக வாழ்வதே பொருத்தமானது என்பதனை உணர்ந்த அவர் கிறிஸ்தவ பாதிரியார் போல்லாது இந்து மத துறவி ஒருவரினைப் போலவே தனது நடையுடை பாவனைகளை மாற்றியமைத்தார் என அறியமுடிகின்றது (தனிநாயகம், சே, 1994:1-5). அந்தவகையில் தனது பெயரை முதலில் 'தைரியநாதர்' என்றும் பின்னர் தூய தமிழில் 'வீரமாமுனிவர்' என்றும் புனைந்து கொண்டார். தமிழ்ச் சுவடிகளைத் தேடித் தேடித் தொகுத்தும் கற்றும் வந்ததால் இவர் 'சுவடி தேடும் சாமியார்' என்றும் வழங்கப்பட்டார். வீரமாமுனிவரின் தமிழ்ப்புலமை, மக்களோடு நெருங்கி உறவாடியதால் பெற்ற அனுபவம், படைப்பாளுமை, கற்பனை, பரந்த சிந்தனை என்பன பரமார்த்த கதையினைப் புத்தாக்கமாகத் தமிழில் செய்யத் தூண்டியுள்ளன.

### ஆ. பரமார்த்தகுரு கதை

பரமார்த்தகுரு கதை வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. இக் கதை 1744 இல் வீரமாமுனிவரினால் தொகுக்கப்பட்ட தமிழ் - இலத்தீன் அகராதியின் இரண்டாவது பின்னிணைப்பாக வெளியிடப்பட்டிருந்தது. அதன் ஏட்டுப் பிரதி ஒன்று முனைவர் சி. இராசமாணிக்கத்தாரால் கொடைக்கானல் செம்பகனூர் பழஞ்சுவடி நூலகத்திலிருந்து பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஆனால் பரமார்த்தகுரு கதையை 1728 இல் வீரமாமுனிவர், தான் எழுதிய 'வேதவிளக்கம்' என்னும் நூலிலே பயன்படுத்தியுள்ளார். இதனை நோக்கும் போது இக்கதைத் தொகுதி 1728 க்கு முன்னதாகவே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. தமிழில் எழுதப்பட்ட இக்கதையை வீரமாமுனிவரே இலத்தீனிலும் மொழிபெயர்த்திருந்தார். இக்கதை ஒவ்வொரு பக்கத்திலும் ஒருபாதி தமிழும் மறுபாதி இலத்தீன் மொழிபெயர்ப்புமாக அமைத்துள்ளமையை நோக்கத்தக்கதாகும்.

### இ. கதைச் செல்வாக்கும் மதிப்பும்

வீரமாமுனிவருக்குப் பின்னால் இக்கதை பல பதிப்புக்களையும் மொழிபயர்ப்புக்களையும் கண்டு வந்துள்ளது. 1800 களில் சென்னையில் சிவில் சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய பெஞ்சமின் பபிங்ரொன் (Benjamin Babington) என்பவரது ஆங்கில மொழிபெயர்ப்பு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதொன்றாகும் (Babington, B.,1822). மூலம், மொழிபெயர்ப்பு, சொற்களஞ்சிய அகராதி என்பவற்றுடன் மிக நீண்ட முகவுரையினையும் கொண்டதாக இம் மொழிபெயர்ப்பு விளங்கிற்று. விநோதரசமஞ்சரி (1888) உள்ளிட்ட பிற இலக்கியத் தொகுப்புக்களிலும் இக்கதை இடம்பெற்றமை வாசகர் மத்தியில் அதற்கிருந்த மதிப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பரமார்த்தகுரு கதையைச் சமகால மொழிநடைக்கு ஏற்றவகையில் மாற்றி எழுதி வெளிவந்த நூல்களும் ஏராளம் உள்ளன.

பாடநூல்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் இடம் பிடித்த சிறப்பும் இதற்குண்டு. இன்றும் சிறுவர் இலக்கிய வரிகையில் செல்வாக்குப் பெற்ற இலக்கியமாக இது விளங்கி வருகின்றது.

முதன் முதலாக உரைநடையில் எழுதப்பட்ட ஓர் ஆக்க இலக்கியமாக விளங்குவது பரமார்த்தகுரு கதையின் தனிச் சிறப்பாகும். 'தமிழில் உரைநடையில் ஆக்க இலக்கியம் ஆக்கப்படுவதற்கான அடிக்கல் இது' என கா. சிவத்தம்பி (1980:22), குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். தமிழில் சங்ககாலம் முதற்கொண்டே உரைநடை வழக்கிலிருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும் அவ்வுரைநடை, ஆக்க இலக்கியம் ஒன்றினை உருவாக்குவதற்கான நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டதாக அமையவில்லை. செய்யுள் நடையுடன் ஒட்டிச் செல்வதாகவே அது அமைந்தது. இந்நிலையில் ஐரோப்பியர்களின் வருகையுடன் நெகிழ்ச்சித் தன்மையும் எளிமையும் பேச்சோசைப் பண்பும் கொண்ட உரைநடை தமிழில் அறிமுகமாகியது. அச்சுயந்திரத்தின் அறிமுகம், மேலைத்தே இலக்கிய பரிச்சயம், கிறிஸ்தவ பாதிரிமார்களின் முதன்முயற்சிகள் என்பன நவீன உரைநடையின் சாத்தியப்பாடுகளுக்கு வித்திட்டன. இச் சூழலில்தான் வீரமாமுனிவர் பரமார்த்தகுரு கதையினை எழுதினார்.

**ஈ. கதைப்பின்னல்**

பரமார்த்தகுருவையும் அவரது ஐந்து சீடர்களான மட்டி, மடையன். மூர்க்கன், மிலேச்சன், மூடன் என்போரையும் கதாபாத்திரங்களாகக் கொண்டு இக்கதைகள் பின்னப்பட்டுள்ளன. இவற்றின் கதைக்களம் தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புறங்களாகும். பெரும்பாலும் வீரமாமுனிவர் அதிகம் ஊடாடிய தென்பாண்டிநாட்டுக் கிராமங்களாக இவை அமைதல் கூடும். பரமார்த்தகுருவினதும் அவரது சீடர்களினதும் 'மதியீனம்' இக்கதைகளின் கருவாக அமைந்திருக்கின்றது. தமது மதியீனத்தினால்

i. ஏமாற்றப்படுதல்
ii. பயங்கொள்ளுதல்
iii. கலக்கமடைதல்
iv. அல்லலுறுதல்
v. ஒன்றை மற்றொன்றாக எண்ணிக் குழம்புதல்
vi. பகுத்தறிவின்றிக் காரியங்களைச் செய்தல்
vii. அறியாமையால் மயங்குதல்

என்பன இக்கதைகளுக்கான அடிப்படைகளாகவும் கதைப்பின்னலைச் சாத்தியப்படுத்தும் பிரதான கூறுகளாகவும் அமைந்துள்ளன. நகைச்சுவையுணர்வினை வாசகர் முன்னிறுத்துவதே கதாசிரியரது பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. 'தமிழில் வெளிவந்த முதலாவது நகைச்சுவை நிறைந்த அங்கத இலக்கியம்' இதுவென கி. இராசா குறிப்பிடுகின்றார் (2006:211). இத் தொகுதியில் எட்டுக் கதைகள் உள்ளன. வீரமாமுனிவர் அவற்றுக்குப் பின்வரும் தலைப்புக்களைக் கொடுத்துள்ளார்.

i. ஆற்றைக் கடந்த கதை
ii. குதிரை முட்டை வாங்கின கதை
iii. வாடகை மாடேறிப் பயணம் போன கதை
iv. குதிரை பிடிக்கத் தூண்டில் விட்ட கதை
v. குதிரை மேனின்று உள்@ருக்குப் போன கதை
vi. பிராமணன் சொன்ன புரோகிதக் கதை
vii. குதிரையிலிருந்து விழுந்த கதை
viii. குருவை சேவித்த கதை

என்பனவே அவையாகும். இக் கதைகளுக்குள் மேலும் சில, உபகதைகளாகவும் சேர்க்கைகளாகவும் அமைந்துள்ளன. அவற்றைப் பிற்காலத்துப் பதிப்பாளர்கள் புதிய தலைப்புக்களின் கீழ் தனித்தனிக் கதைகளாக அமைத்துள்ளனர். பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் கலந்த வகையில் இக் கதைகள் எழுதப்பட்டுள்ளன. இக் கதைகளில் வரும் பேச்சுவழக்கினை பிராமணர் உள்ளிட்ட உயர்வகுப்பாரின் பேச்சுவழக்காக இனங்காண முடியும். எழுத்துவழக்கில் பயின்றுவரும் புணர்ச்சி விதிகள், இலக்கண அமைப்பு முறை என்பனவற்றை வீரமாமுனிவர் கதைகளில் கச்சிதமாகக் கையாண்டுள்ளார். சுருக்கமாக நோக்கின்

i. மதியீனத்தினை அடிப்படையாகக் கொண்ட நகைச்சுவையுணர்வினைக் கையாளுதல்
ii. உரைநடையில் எழுந்த ஆக்க இலக்கியப் படைப்பாக விளங்குதல்
iii. பேச்சு வழக்குடன் ஒட்டிச் செல்லுதல்

என்பன பரமார்த்தகுரு கதையின் தனிப்பண்புகளாக அமைந்திருக்கின்றன. இவை தமிழ் இலக்கியப்பரப்புக்கு புதியவை என்பது நோக்கத்தக்கது.

## 5. மூலக்கதை பற்றிய விவாதங்கள்

மதியீனத்தினை அடிப்படையாகக் கொண்ட கதை மரபு தமிழுக்குப் புதிய வரவாக அமைந்துள்ளதை நோக்குகின்ற போது அதன் மூலக்கதை அல்லது அதனை எழுதுவதற்கான உந்து சக்தி வீரமாமுனிவருக்கு எங்கிருந்து கிடைத்துள்ளது என்பதை ஆராய்தல் அவசியமானதாகும். இது பற்றி இரண்டு கருத்துநிலைகள் நிலவிவருகின்றன.

i. பரமார்த்தகுரு கதைக்கான மூலத்தினை தமிழ்நாட்டுக்குள் - அதாவது தமிழ் இலக்கியப் பரப்பினுள் தேடுவது.
ii. இக்கதைக்குரிய அடிப்படைகளை மேனாட்டு இலக்கியச் செல்வாக்கின் வழி அடையாளம் காண விழைவது.

பரமார்த்தகுரு கதைக்கான மூலத்தினை தமிழ்நாட்டுக்குள் தேட விழைந்தவர்கள், வீரமாமுனிவர் தமிழ் இலக்கியங்கள் மற்றும் நாட்டார் இலக்கியங்களிலிருந்து இக் கதைப்பொருளினை வளர்த்தெடுத்திருக்கலாம் எனக் கொண்டனர். கதை கூறும் மரபு எல்லா மொழிகளுக்கும் பொதுவானதொன்றாகும். தமிழில் கதை கூறும் மரபு மிகவும் பழங்காலத்தில் இருந்து வளர்ந்து வந்துள்ளமையை உறுதிப்படுத்தும் சான்றாதாரங்களை அடையாளங்காண முடிகின்றது. புராணக் கதைகள், இதிகாசக்கதைகள், காவியக் கதைகள், வீரர்கள் மற்றும் மன்னர்களின் வரலாற்றோடு தொடர்புபட்ட கதைகள், புலவர்கள் அவர்களின் வித்துவத் திறனுடன் தொடர்புபட்ட கதைகள் எனப் பல கதைகள் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. நாட்டார் நிலையிலும் பல கதைகள் நிலவி வந்திருக்கும் என்பதை உறுதிபடக் கூற முடியும். நாயக்கர் காலப்பகுதியிலும் ஐரோப்பியர் காலப்பகுதியிலும் தோற்றம் பெற்ற தலபுராணங்கள், கதைப்பாடல்கள் மற்றும் முச்சந்தி இலக்கியங்கள் என்பன மக்கள் மத்தியில் நாட்டார் நிலையில் பயின்று வந்த கதைகள் சிலவற்றிற்கு செந்நெறி அந்தஸ்த்தினை வழங்கியிருத்தல் நோக்கத்தக்கது. வடமொழி உள்ளிட்ட பிற இந்திய மொழிகளிலிருந்தும் கதைகள் காலந்தோறும் தமிழுக்கு அறிமுகமாகியுள்ளன. பஞ்சதந்திரக் கதை, இதோபதேசக்கதை, விக்கிரமாதித்தன் கதை, மதன காமாராஜன் கதை, பாவைகள் சொல்லும் படிமக்கதைகள், தெனாலிராமன் கதை, மரியாதை இராமன் கதை முதலானவற்றினை வகைமாதிரியாக எடுத்தாளலாம்.

பரமார்த்தகுரு கதைக்கும் இவற்றுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுண்டு. பரமார்த்தகுரு கதைக்கு முன்னதாகத் தமிழில் செல்வாக்குற்ற கதைகள் வீரம், காதல், சமயம், அறம் சார்ந்தவையாகவே பெரிதும் விளங்கின. அத்துடன், அவை இலட்சிய பூர்வமான வாழ்வியலினை அடையாளப்படுத்துவனவாகவும், வாசகர்களைச் சிந்திக்க வைப்பனவாகவும், நன்னெறிப்படுத்துவனவாகவும் அமைந்திருந்ததைக் காணமுடிகின்றது. நகைச்சுவையுணர்வு இக்கதைகளில் முற்றாக இல்லை எனக் கூறிவிட முடியாது. சில கதைகளில் நகைச்சுவையுணர்வு காணப்படுவதனை ஏற்றுக் கொண்டேயாதல் வேண்டும். ஆனால் அக்கதைகளிலும் நகைச்சுவையுணர்வினை விஞ்சி வாசகர்களின் சிந்தனையைக் கிறவிடும் போக்கே அதிகம் முன்னிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நகைச்சுவைக்காக இலக்கியமொன்றினைத் தனித்துப் படைக்கும் போக்கு வீரமாமுனிவருடனேயே தொடங்குகின்றது எனலாம்.

வீரமாமுனிவர் பிறந்தது, வளர்ந்தது மற்றும் குருநிலைப்படுத்தப்பட்டது யாவும் ஐரோப்பாவிலேயே நிகழ்ந்துள்ளன. இதனால் ஐரோப்பாவில் நிகழ்ந்த இலக்கிய முயற்சிகள் அவற்றின் போக்குகள் குறித்து அவர் நிச்சயமாக அறிந்திருப்பார். இதன் பின்னணியில் ஐரோப்பாவில் நிகழ்ந்த யாதேனும் ஓர் இலக்கிய முயற்சி அவரது பரமார்த்தகுரு கதைக்கு ஆதர்சமாக அமைந்திருக்கலாம் என்ற கோணத்திலும் ஆய்வுகள் சில நிகழ்ந்துள்ளன. பரமார்த்தகுரு கதையினைப் பதிப்பித்த பெஞ்சமின் பபிங்ரொன் பிரெஞ்சு மொழியில் Jeande La Fontaine (1621 -1695) என்பவரால் எழுதப்பட்ட கதைத் தொகுதியினை பரமார்த்தகுரு கதைக்கான மூலமாக எடுத்துக்காட்ட முனைகின்றார் (Babington,B,1822:vi). இக் கதைகள் இன்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றினை வாசிப்போர் பரமார்த்தகுரு கதை அவற்றின் மொழிபெயர்ப்போ அல்லது தழுவலோ இல்லை என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். Jeande La Fontaine எழுதிய கதைகள் விநோதக் கதைகளாகவும், சிந்திக்க வைக்கும் கதைகளாகவும், தேவதைக் கதை மரபினை ஒட்டியனவாகவுமே அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாகும்.

## 6. கோதம் கிராமப் புத்திசாலிகள் (Wise Men of Gotham)

ஆங்கில வாய்மொழி மரபில் வழங்கி வந்ததும் பிற்காலங்களில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் செல்வாக்குப் பெற்றதுமான 'கோதம் கிராமப் புத்திசாலிகள்' கதைகளே பரமார்த்தகுரு கதைகளுடன் ஒத்துப்போவனவாகவும் அவற்றுக்கு வேண்டிய முன்னுதாரணங்களை வழங்குவனவாகவும் அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

‘கோதம் கிராமப் புத்திசாலிகள்’ கதைகள் நீண்டகாலமாக வாய்மொழிமரபில் கையளிக்கப்பட்டு 1540 இல் எட்டாம் ஹென்றி மன்னனின் காலத்தில் சிறு கைநூலாக (Chap book) அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன (Gerard T. Koeppel,2001:103). இக் கதைகள் கி.பி 12ஆம் நூற்றாண்டிலே உருவாகியிருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. பல கதைகள் மறைந்து போக எஞ்சிய இருபது கதைகள் மட்டும் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன. இக் கதைகளின் தோற்றம் பற்றிச் சுவையானதோர் சம்பவம் பேசப்படுகின்றது. இங்கிலாந்தினை ஆண்ட ஜோன் மன்னன் (1199 – 1216) தனது போக்குவரத்துக்காக கோதம் கிராமத்தினை ஊடறுத்துப் பாதை ஒன்றினை அமைக்க விரும்பினான். அதற்காக அதிகாரிகளை அனுப்பி வைக்கவும் தீர்மானித்தான். இதனை கோதம் கிராம மக்கள் விரும்பவில்லை. பாதை அமையும் பட்சத்தில் அதனைப் பராமரிக்கும் பணத்தினைத் தாங்கள் தர வேண்டிருக்குமே என எண்ணினர். இதனால் அரச அதிகாரிகளதும் மன்னனதும் கவனத்தினைத் திசை திருப்பத் தங்களை முட்டாள்களாகவும் பைத்தியக்காரர்களாகவும் காட்ட முயன்றனர். ஜோன் மன்னனது காலப்பகுதியில் முட்டாள்தனம் மற்றும் பைத்தியம் தொற்று வியாதியாக நம்பப்பட்டதால் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கமைய மன்னன் தனது முயற்சியினைக் கைவிட்டான் எனக் கூறப்படுகின்றது. இங்கிலாந்தில் பின்னப்பட்ட இக்கதைகள் காலப்போக்கில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவிச் செல்வாக்குப் பெற்றன (Seal, G.,2001:272–3).

**7. இலக்கியங்களில் தாக்கம்**

பரமார்த்தகுரு கதையினையும் கோதம்கிராம புத்திசாலிகள் கதையினையும் ஒருங்கே நோக்குகின்றபோது அவற்றிடையே தாக்கம் நிகழ்ந்துள்ளமையை கண்டுணர முடிகின்றது. தாக்கம் என்பது ஒரு மொழி இலக்கியப் பண்புகள் அல்லது கூறுகள் மற்றோர் மொழி இலக்கியத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புலப்படுவதாகும் (Prawer, S.S., 1973:68). இது திட்டமிட்டு நிகழும் செயற்பாடல்ல. படைப்பாக்கம் ஒன்றில் படைப்பாளியே அறியாதவகையில் தாக்கம் நிகழ்ந்து விடுகின்றது. மொழி, இன, நாடு மற்றும் கண்ட எல்லைகளைத் தாண்டித் தாக்கங்கள் ஏற்படுவதுண்டு. இத்தாக்கம் இலக்கியத்தில் ஊடுருவும் நிலைநோக்கி ஏற்றுக்கொள்ளல், பாதிப்பு, போலச்செய்தல், தழுவல், தாக்கம் எனத் தனித்தனியாகப் பிரித்து நோக்கப்படுகின்றன. ஒப்பியல் இலக்கியம் இவற்றினைத் தனித்தனிக் கோட்பாடுகளாக ஆராய்கின்றது. இவற்றுள் இறுதியான நிலையாகத் தாக்கம் நிகழ்கின்றது. தாக்கத்தின் பின்னணியில் தோன்றும் இலக்கியங்கள் - யாதேனும் ஓர் இலக்கியமொன்றின் - பிரதிகளாகப் பார்க்கப்படுபதில்லை. மாறாக, அவை சுதந்திரமான இலக்கியப் பிரதிகளாகப் பார்க்கப்படுகின்றன. வணிகத் தொடர்புகள், சமய உறவுகள், படையெடுப்புக்கள், புலப்பெயர்வுகள் முதலானவை தாக்கத்துக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் காரணிகளாக இனங்காணப்படுகின்றன.

கோதம் கிராம புத்திசாலிகள் கதைகள் ஜோன் மன்னனின் முயற்சியினைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் உருவாகின என்பது முன்னர் விபரிக்கப்பட்டது. அதுபோல பரமார்த்தகுரு கதை தோன்றுவதற்கும் வலுவான பின்புலம் இருந்ததை 1800 களில் அதனை மீளப் பதிப்பித்த பெஞ்சமின் பபிங்ரொன் சுட்டிக்காட்டுகின்றார் (Babington,B.,1922:iv). வீரமாமுனிவர் காலப்பகுதியில் கிறிஸ்தவ மதப்பரம்பலுக்கு மிகத் தடையாக அமைந்தவை மடங்கள். சோழர்காலந் தொட்டு தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய மடங்கள் நாயக்கர் காலத்தில் பொருளாதார ரீதியாகவும் சமய தத்துவ ரீதியாகவும் மேலும் பலம் பெற்றன. அவற்றின் செல்வாக்கு ஐரோப்பியர் காலத்திலும் தொடர்ந்ததை அறியமுடிகின்றது. இம் மடங்களது நிர்வாகிகளாக விளங்கிய மடாதிபதிகளையும் அவர்களது சீடர்களையும் இலக்கு வைத்தே பரமார்த்தகுரு கதை செய்யப்பட்டதாக பபிங்ரொன் குறிப்பிடுகின்றார். அவரது கருத்தின் படி பரமார்த்தகுரு கதை ஓர் அங்கத இலக்கியமாகும். மடாதிபதிகளை பரமார்த்தகுருவாகவும் சீடர்களை மட்டி, மடையன், மூர்க்கன், மிலேச்சன், மூடன் என்போராகவும் கற்பனைசெய்து அங்கதப்பாணியில் அவர்களைக் கிண்டல் செய்வதற்காக வீரமாமுனிவர் இக்கதைகளை எழுதியுள்ளார். ஆரம்பகாலப் பதிப்பாசிரியர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் பபிங்ரொனின் கருத்தைக் கற்பனை என்றோ ஊகம் என்றோ முற்றிலும் உதறிவிட முடியவில்லை.

வி. செல்வநாயகம் பரமார்த்தகுரு கதையின் தோற்றத்துக்கான பிறிதொரு காரணத்தினைத் தனது நூலில் சுட்டிக்காட்டுகின்றார் (1960:173). கத்தோலிக்க மதத்துக்குப் போட்டியாக இருந்த பிற கிறிஸ்தவமதப் பிரிவுகளைச் சேர்ந்த பாதிரிமார்களே (சீர்திருத்த சபைப் பாதிரிமார்களே) அங்கதப் பாணியில் இக் கதைகளில் கிண்டல் செய்யப்படுகின்றனர் என்பது அவரது கருத்தாகும். ஆக, கருத்துநிலை ரீதியாக பரமார்த்தகுரு கதைகளுக்கும் கோதம் கிராம புத்திசாலிகள் கதைகளுக்கும் இடையில் காணப்பட்ட ஒற்றுமை ‘தாக்கம்’ ஏற்படுவதற்கான பாலத்தினை உருவாக்கிக் கொடுத்திருக்கலாம்.

தாக்கத்தினை இரண்டு வகைப்படுத்தி நோக்கமுடியும்.

i. நேரடியான தாக்கம்
ii. மறைமுகமான தாக்கம்.

இவ்விரு தாக்கங்களும் பரமார்த்தகுரு கதையில் தெளிவாகவே தெரிகின்றன. வீரமாமுனிவர் கோதம் கிராம புத்திசாலிகள் கதைத் தொகுதியிலுள்ள ஒரு கதையை நேரடியாகவே எடுத்தாண்டுள்ளார். பரமார்த்தகுருவும் அவரது சீடர்களும் தமது வழியில் குறிக்கிட்ட ஆற்றினைக் கடந்த பின்னர் தாம் பாதுகாப்பாகக் கரையேறிவிட்டதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினர். அதற்காகத் தம்மை எண்ணிக் கணக்கிடத் தொடங்கினர். எண்ணுபவர் தன்னைத் தவிர்த்து மற்றையவர்களை எண்ணி ஒருவரை ஆறு விழுங்கிவிட்டதாகப் புலம்பிய கதையொன்று பரமார்த்தகுரு கதைத்தொகுதியிலுள்ளது. இக் கதை கோதம் கிராம புத்திசாலிகள் கதைத் தொகுதியில் சிறு மாற்றங்களுடன் காணப்படுகின்றது. பன்னிரு கோதம் கிராமவாசிகள் மீன் பிடிப்பதற்காக குளத்திற்குச் சென்று திரும்பிய பின் பரமார்த்தகுரு கதை முட்டாள்களைப் போலவே எண்ணியவர் தன்னைத் தவிர்த்து மற்றையவர்களைக் கணக்கிட்டு ஒருவரைக் காணவில்லை எனக் கலங்கியதாக கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட கதை தவிர்ந்த மற்றைய கதைகளில் நேரடியான தாக்கத்தினை அவதானிக்க முடியவில்லை. ஆனால் மறைமுகமான தாக்கங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

i. கதைப்பின்னல்,
ii. பாத்திரவார்ப்பு
iii. ஏமாறும் விதம்
iv. நகைச்சுவையுணர்வு தோன்றும் நிலை

என்பனவற்றில் ஒற்றுமைகள் நிலவுவதைக் காணலாம். இவ்விரு கதைத் தொகுதியிலும் உள்ள கதைகள் எளிமையான கதைப்பின்னல் அமைப்பில் உள்ளன. கதைகள் நீண்டு செல்லவில்லை. சுருக்கமான சம்பவ விபரிப்புடன் கதை அதன் முடிவை நோக்கி நகர்வதைக் காணமுடிகின்றது. சுருக்கமானதும் சுட்டிப்பானதுமான உரையாடல்களே கதையில் சேர்க்கப்பட்டுள்ளன. கோதம் கிராம புத்திசாலிகள் கதைத் தொகுதியிலுள்ள பல கதைகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வரிகளிலேயே அமைந்திருத்தல் நோக்கத்தக்கதாகும். பரமார்த்தகுரு கதையைப் பொறுத்தமட்டில் அக் கதைகள் சற்று விரிவானவையாகத் தென்பட்டாலும் ஒரு கதைக்குள் பல குட்டிக்கதைகள் நகைச்சுவையுணர்வு குன்றாத வண்ணம் இணைக்கப்பட்டுள்ளமை கண்கூடு. பிற்காலப் பதிப்பாளர்கள் சிலர் அவற்றினைத் தனித்தனியே தலைப்புக்களில் அச்சிட்டுள்ளனர்.

இரு கதைத்தொகுதிகளிலும் மிகக் குறைந்தளவான பாத்திரங்களே அறிமுகமாகின்றன. பரமார்த்தகுரு கதைகளில் பரமார்த்தகுருவும் ஐந்து சீடர்களுமே தலைமைப் பாத்திரங்களாக அமைகின்றனர். இவ்வறுவரையும் தவிர்த்து கதைகளில் அறிமுகமாகும் பாத்திரங்கள் ஒருசிலரே. இப் பண்பு கோதம் கிராம புத்திசாலிகள் கதைகளிலும் காணப்படுகின்றது. கதைப்பொருளுக்கு ஏற்றவகையில் எண்ணிக்கையில் குறைவான பாத்திரங்களே இங்கும் அறிமுகமாவதைக் காணலாம். தமது இயற்கைக்கு மாறான செயற்பாடுகள், அப்பாவித்தனம், பகுத்தறிவற்ற செய்கை என்பவற்றாலும் முட்டாள்தனமான உரையாடல்களாலும் அவர்கள் நகைச்சுவையை ஏற்படுத்துவதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

இரு கதைத்தொகுதிகளிலும் வரும் பாத்திரங்கள் ஏமாறும் விதத்தில் ஒற்றுமை காணப்படுகிறது. மற்றவர் கூற்றுக்களை கண்மூடித்தனமாக நம்புதல், ஆராய்ந்து நோக்காது தமது மனதில் பட்டதனைச் செய்து முடித்தல், கூறுவதனைச் சரியாக விளங்கிக் கொள்ளாது செயற்படல், மற்றவர் கூறும் கருத்துக்களை முரட்டுத்தனமாக மறுத்தல் அல்லது நம்பாமல் செயற்படல், இலகுவாகச் செய்து முடிக்கத்தக்க வேலைகளை கஷ்டப்பட்டுச் செய்ய முயலுதல் என்பன அவர்களின் தொடர்ச்சியான ஏமாற்றத்திற்கும் துயரத்திற்கும் காரணமாவதை இரு கதைத் தொகுதிகளிலும் வரும் கதைகள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

நகையுணர்வு தோன்றும் நிலையின் அடிப்படையில் இவ்விருமொழிக் கதைகளுக்குமிடையில் தாக்கம் வெளிப்பட்டு நிற்கின்றது. மதியீனம், ஏமாற்று, அறியாமை, மனைவியால் ஏமாற்றுப்படல் என்பன நகையுணர்வு தோன்றுவதற்கான அடிப்படைகளாக இக் கதைகளில் கூறப்படுகின்றன.

எனினும், கோதம் கிராம புத்திசாலிகள் தொகுதியிலுள்ள பாதிரிமார்கள் மற்றும் பெண்களை அதிகளவில் கதாபாத்திரங்களாகக் கொண்ட கதைகளில் வீரமாமுனிவர் கருத்தினைச் செலுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கதொரு விடயமாகும்.

இவற்றினை நோக்கும் போது, வீரமாமுனிவர் கோதம்கிராம புத்திசாலிகள் தொகுதியிலுள்ள கதைகளைத் தழுவியுள்ளார் என்பது புலனாகின்றது. ஐரோப்பிய சூழலில் கோதம்கிராம புத்திசாலிகள் கதைகளை நிச்சயமாக அவர் கற்றோ அறிந்தோ இருக்க வேண்டும். அக்கதைகளும் அவற்றில் கதைசொல்லிகள் கையாண்டிருக்கக் கூடிய உத்திகளும் அவர் மனதில் பதிந்திருக்கின்றன. ஆழ்மனத்தில் பதிந்த இக் கதைகள் தமிழில் அவர் புதுவகையான படைப்பாக்க முயற்சியில் ஈடுபட்ட போது அவருக்கு வழிகாட்டியிருக்கின்றன. ஆங்கில மொழியில் உருவான கோதம் கிராம புத்திசாலிகள் கதைகள் இத்தாலியில் பிறந்த வீரமாமுனிவருக்கு எவ்வாறு அறிமுகமாயின என்பது தாக்கக் கோட்பாட்டினடியாக மேலும் நுணுகி நோக்கப்பட வேண்டியதாகும்.

## 8. முடிவுரை

தொகுத்து நோக்குகின்ற போது, வீரமாமுனிவர் கோதம்கிராம புத்திசாலிகள் கதைகளின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளார் என்பது தெரிகின்றது. கோதம்கிராம புத்திசாலிகள் கதைகளின் கதைப்பின்னல், அமைப்பு, உத்தி, பாத்திரவார்ப்பு, நகைச்சுவைப் பண்பு முதலானவற்றை அதிகளவிலும் கதைப்பொருளை மிகக் குறைந்த அளவிலும் அவர் வெவ்வேறு தளங்களில் பின்பற்றியுள்ளார். ஆனால் அவற்றினைத் தமிழ்நாட்டுப் பின்னணியில் தமிழ் வாசகர்களுக்கு ஏற்றவகையில் உள்வாங்கியமை அவரின் சாதனையாகும். தமிழ்ப் பண்பாடு, தமிழ் மரபு, தமிழ்க் கதை இலக்கிய பின்னணி என்பவற்றை அனுசரித்தே பரமார்த்தகுரு கதையை அவர் படைத்துள்ளமை தெரிகின்றது. நெகிழ்வுத் தன்மை கொண்டதும் பேச்சுமொழியோடு ஒட்டிச் செல்கின்றதுமான மொழி நடை அவரது கதைகளுக்குக் கனதியையும் காத்திரத்தினையும் ஏற்படுத்தித் தந்துள்ளது. மேனாட்டு இலக்கியத் தாக்கத்தினையும் விஞ்சி சுத்தமான தமிழ்ப் படைப்பாகப் பரமார்த்குரு கதையினை மாற்றிய பெருமை இவருக்குண்டு. இதன் மூலம் தமிழ்க் கதை இலக்கிய உலகிற்குப் புதுவழிகாட்டிய ஒருவராக வீரமாமுனிவர் என்றென்றும் போற்றப்பட வேண்டியவராகின்றார்.

**அடிக்குறிப்புகள்**


1. இராசா, கி., (2006), தமிழர் இலக்கிய வரலாறு, அன்னை நிலையம், திருச்சிராப்பள்ளி.
2. சிவத்தம்பி, கா., (1980) தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
3. செல்வநாயகம், வி., (1960), தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீ லங்கா வெளியீடு, கொழும்பு.
4. தனிநாயகம், சே, (1994), ''தமிழ் வளர்த்த இத்தாலியர் வீரமாமுனிவர்'', திருமறைக் கலாமன்றம்.
5. Babington, B., (1822), The Adventures of the Gooroo Paramarthan, J.M Richardsan Printers, London, 1822.
6. Prawer, S.S., (1973), Comparative Literary Studies, Duckworth Publication, London,.
7. Gerard T. Koeppel, (2001), Water for Gotham: a History Princeton University Press,https://en.wikipedia.org/wiki/Wise_Men_of_Gotham
8. Seal, G., (2001) *Encyclopedia of folk heroes* ABC-CLIO https://en.wikipedia.org/wiki/Wise_Men_of_Gotham